பி.வெ.எண்: 248

நாள்: 2/05/2013

# பத்திரிக்கை செய்தி

தொழிலாளர் ஆணையர் டாக்டர்.ப. சந்திரமோகன், இ.ஆ.ப சென்னை, தொழிலாளர் கூடுதல் ஆணையர் திரு. சி. சோம்புராஜன், மற்றும் சென்னை தொழிலாளர் இணை ஆணையர் - 1 திரு. தி. குமரன் ஆகியோரின் உத்தரவின்பேரில் தொழிலாளர் தினமான 1-05-2013 அன்று சென்னை, வேலூர், திருவண்ணாமலை ஆகிய பகுதிகளில் தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட்டுள்ளதா என சிறப்பு ஆய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டதன் அடிப்படையில் ஐந்து தொழிலாளர் ஆய்வாளர்கள் தலைமையில் பல்வேறு குழுக்களாக பிரிந்து ஆய்வு செய்யப்பட்டது.

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை) சட்டம், 1958 மற்றும் அதன் விதிகள் கீழ் மேதினத்தன்று விடுமுறை அளிக்க அரசு அறிவித்துள்ள நேர்வில் அந்நாளில் தொழிலாளர்கள் பணிபுரிய விரும்பினால் தொழிலாளர்களின் சம்மதத்தின் பேரில் மாற்று விடுப்பு வழங்கியோ அல்லது இரட்டிப்பு சம்பளம் வழங்கியோ மே தினத்தன்று பணியில் ஈடுபடுத்த வேண்டும். இது குறித்து ஒரு நாள் முன்னரே சம்பந்தப்பட்ட தொழிலாளர் ஆய்வாளருக்கு நோட்டீஸ் அனுப்பி பணிபுரியும் தொழிலாளர்கள் விபரம் தெரிவிக்கப்படவேண்டும்.

தொழிலாளர்களுக்கு மாற்று விடுப்பு வழங்காமலும், இரட்டிப்பு சம்பளம் வழங்குவதாக குறிப்பிடாமலும் உரிய நோட்டீஸ் சம்பந்தப்பட்ட தொழிலாளர் ஆய்வாளருக்கு அனுப்பாமலும் மே தினத்தன்று பணியில் ஈடுபடுத்திய நிறுவனங்களை ஆய்வு செய்த பொழுது கடைகள் மற்றும் இதர நிறுவனங்களில் 213 முரண்பாடுகளும் உணவு நிறுவனங்களில் சட்ட விதிகளை மீறியதற்காக 274 முரண்பாடுகளும், மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் நலச் சட்டத்தில் உள்ள தேசிய பண்டிகை விடுமுறை சட்ட விதிமுறைகளை மீறியதற்காக 20 முரண்பாடுகளும் ஆக மொத்தம் 507 நிறுவனங்கள் மீது சட்ட விதிமுறைகளை மீறியதற்காக வழக்கு பதிவு செய்து சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2/5/13

தொழிலாளர் இணை ஆணையர் - 1
சென்னை - 6

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9